ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

ஆண்டாள் அருளிச்செய்த

# ॥ கார்க்கோடல் பூக்காள் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iittam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ கார்க்கோடல் பூக்காள் ॥

தலைவி பிரிவாற்றாது வருந்துதல்

‡கார்க் கோடல் பூக்காள்!⋆ கார்க் கடல்
வண்ணன் என் மேல்⋆ உம்மைப்
போர்க் கோலம் செய்து⋆ போர
விடுத்தவன் எங்குற்றான்⋆
ஆர்க்கோ இனி நாம்⋆
பூசல் இடுவது⋆ அணி துழாய்த்
தார்க்கோடும் நெஞ்சந் தன்னை⋆
படைக்க வல்லேன் அந்தோ! (1)

மேல் தோன்றிப் பூக்காள்!⋆ மேல் உலகங்களின் மீது போய்⋆
மேல் தோன்றும் சோதி⋆ வேத முதல்வர் வலங்கையில்⋆
மேல் தோன்றும் ஆழியின்⋆ வெஞ்சுடர் போலச் சுடாது⋆ எம்மை
மாற்றோலைப் பட்டவர்⋆ கூட்டத்து வைத்து கொள்கிற்றிரே (2)

கோவை மணாட்டி!⋆ நீ உன் கொழுங்கனி கொண்டு⋆ எம்மை
ஆவி தொலைவியேல்⋆ வாய் அழகர் தம்மை அஞ்சுதும்⋆
பாவியேன் தோன்றி⋆ பாம்பணையார்க்கும் தம் பாம்பு போல்⋆
நாவும் இரண்டுள வாய்த்து⋆ நாணிலியேனுக்கே (3)

முல்லைப் பிராட்டி!⋆ நீ உன் முறுவல்கள் கொண்டு⋆ எம்மை
அல்லல் விளைவியேல்⋆ ஆழி நங்காய்! உன் அடைக்கலம்⋆
கொல்லை அரக்கியை மூக்கரிந்திட்ட⋆ குமரனார்
சொல்லும் பொய்யானால்⋆ நானும் பிறந்தமை பொய் அன்றே (4)

பாடும் குயில்காள்!⋆ ஈதென்ன பாடல்⋆ நல் வேங்கட
நாடர் நமக்கொரு வாழ்வு தந்தால்⋆ வந்து பாடுமின்⋆
ஆடும் கருளக் கொடி உடையார்⋆ வந்தருள் செய்து⋆
கூடுவர் ஆயிடில்⋆ கூவி நும் பாட்டுக்கள் கேட்டுமே (5)

www.prapatti.com

கண மா மயில்காள்!⋆ கண்ண பிரான் திருக் கோலம் போன்று⋆
அணி மா நடம் பயின்றாடுகின்றீர்க்கு⋆ அடி வீழ்கின்றேன்⋆
பணம் ஆடரவணைப்⋆ பற்பல காலமும் பள்ளி கொள்⋆
மணவாளர் நம்மை வைத்த⋆ பரிசிது காண்மினே (6)

நடம் ஆடித் தோகை விரிக்கின்ற⋆ மா மயில்காள்⋆ உம்மை
நடம் ஆட்டம் காணப்⋆ பாவியேன் நான் ஓர் முதல் இலேன்⋆
குடம் ஆடு கூத்தன்⋆ கோவிந்தன் கோமிறை செய்து⋆ எம்மை
உடை மாடு கொண்டான்⋆ உங்களுக்கினி ஒன்று போதுமே (7)

மழையே! மழையே! மண் புறம்
பூசி⋆ உள்ளாய் நின்று⋆
மெழுகூற்றினாற் போல்⋆ ஊற்றுநல்
வேங்கடத்துள் நின்ற⋆
அழகப் பிரானார் தம்மை⋆ என்
நெஞ்சத்தகப்படத்-
தழுவி நின்று⋆ என்னைத் ததர்த்திக் கொண்டு⋆
ஊற்றவும் வல்லையே (8)

கடலே! கடலே! உன்னைக் கடைந்து⋆ கலக்குறுத்து⋆
உடலுள் புகுந்து நின்று⋆ ஊறல் அறுத்தவற்கு⋆ என்னையும்
உடலுள் புகுந்து நின்று⋆ ஊறல் அறுக்கின்ற மாயற்கு⋆ என்
நடலைகள் எல்லாம்⋆ நாகணைக்கே சென்றுரைத்தியே (9)

‡நல்ல என் தோழி!⋆ நாகணை மிசை நம்பரர்⋆
செல்வர் பெரியர்⋆ சிறு மானிடவர் நாம் செய்வதென்⋆
வில்லி புதுவை⋆ விட்டுசித்தர் தங்கள் தேவரை⋆
வல்ல பரிசு வருவிப்பரேல்⋆ அது காண்டுமே (10)

॥ ஆண்டாள் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com